1971 டிசம்பர் 14]

கூட்டுறவுச்சங்கங்களுக்கு தனி வாரியம்

** 379. வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—*

கூட்டுறவுச் சங்கங்களில் அதிகமானவர்கள் பணிபுரிவதனால் அதனை தனி வாரியமாக அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, கூட்டுறவுச் சங்கங்களை தனி வாரியமாக அமைக்கும் உத்தேசம் இல்லை என்று அமைச்சர் பதில் சொன்னார்கள். கூட்டுறவுச் சங்கங்கள் ஏராளமாக இருப்பதால், அவற்றை ஒழுங்குபடுத்துவதற்காக, அவற்றை தனி வாரியமாக அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட எண்ணம் இல்லை. கூட்டுறவுச் சங்கங்களுக்கு தனி வாரியம் தேவையில்லை என்று கருதுகிறேன். காரணம், ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும், ஒவ்வொரு வாரியமாகவே செயல்படுகின்றது.

பவானி கூட்டுறவு விற்பனைச் சங்கம்

** 380. வினா—திரு. ஈ. எம். நடராசன் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—*

கோவை மாவட்டம், பவானி கோவாப்பரேடிவ் மார்க்கெட்டிங் சொசைட்டியின் நிர்வாக சபை எப்பொழுது ஏன் கலைக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கோவை மாவட்டம், பவானி கூட்டுறவு விற்பனைச் சங்கம் செயல்படுவதில் பல ஒழுங்கீனங்கள் காணப்பட்டதால் 5—10—1968 அன்று அதன் செயற்குழு கலைக்கப்பட்டது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, பவானி கூட்டுறவு விற்பனைச் சங்கம் செயல்படுவதில் பல ஒழுங்கீனங்கள் காணப்பட்டதால் அது கலைக்கப்பட்டது என்று குறிப்பிட்டார்கள். அந்தக் குழுவின் தலைவர் கையாடல் செய்ததாக பரவலாகப் பேசப்படுகிறது. அவர் பேரில் இது வரை என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? அந்தப் பணத்தை திருப்பிப் பெற அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, கலைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் மீதும், இன்னும் 9 பேர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. சர்சார்ஜ் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் முடியவில்லை.